பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 தை 21 செவ்வாய்க்கிழமை 02.02.2021 கதிர் 320

## மணிவண்ணன் உட்பட 4 பேரின் வழக்கு நாளை விசாரணைக்கு!

(ந.லோகதயாளன்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து விலக்கப்பட்ட வி.மணிவண்ணன் உட்பட 4 பேர் தொடர்பான வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நாளை விசாரணைக்கு வருகின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அகில இலங்கை தமிழ்க் ☞2


# தமிழ் மொழியை மதிக்காத இலங்கையை சுதந்திர நாடாக ஏற்றுக்கொள்ள முடியாது!



### மனோ எம்.பி. சீற்றத்துடன் தெரிவிப்பு

எங்கள் மொழிக்கும், மதத்துக்கும், இனத்துக்கும், இலங்கை நாட்டுக்குள்ளே கௌரவமான இடம் தராத இன்றைய இலங்கையை ஒரு சுதந்திர நாடாக ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழர்களையும், முஸ் லிம்களையும் மொழி, மத, இன அடிப்படைகளில் தூரத்தள்ளி வைத்து, இரண்டாம், மூன்றாம் தர பிரஜைகளாக நடத்தும் இன்றைய அரசுக்குள்ளே அடைக்கலம் புகுந்து, இந்த இனவாத அரசுக்கு ஓர் ஏற்புடைமை ஏற்படுத்தி, இதை ஒரு சுதந்திர நாடாக காட்ட முயலும் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது. 65 வருடங்களுக்குப் பிறகு, கடந்த எமது நல்லாட்சியில், நாம் முன்னின்று போராடி பெற்ற, தமிழ்த் தேசிய கீதம் பாடும் உரிமையை, இடைநிறுத்தி விட்டு, இவர்கள் கொண்டாடும் சுதந்திர நிகழ்வுக்கு, ☞2

## இலங்கையில் வைத்தியரின் உயிரைப் பறித்த கொரோனா



கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான வைத்தியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ராகம வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த 32 வயதான கயான் தந்தநாராயண என்ற வைத்தியரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். ☞2

# புதிய பிரேரணையால் பதறுகிறது இலங்கை!

### இந்தியா உள்ளிட்ட ஐ.நா. உறுப்புரிமை நாடுகளின் ஆதரவைப் பெறவும் முயற்சி

**ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படவுள்ள புதிய பிரேரணையால் ராஜபக்ஷக்கள் தலைமையிலான அரசு பதற்றமடைந்துள்ளது.**

**இந்தப் பதற்றத்தைச் சமாளிக்கும் வகையில் புதிய பிரேரணைக்கு எதிராக இந்தியா உள்ளிட்ட ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்புரிமை நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சிகளை அரசு ஆரம்பித்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.** ☞2



## மன்னார் மீனவர்கள் 3 நாள்களாக மாயம்!

(ந.லோகதயாளன்)

மன்னாரில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்ற மூவர் மூன்று நாள்களாகக் கரை திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார், ஓலைத்தொடுவாய் பகுதியில் இருந்து கடந்த சனிக்கிழமை இரவு படகு ஒன்றில் கடற்றொழிலுக்குச் சென்ற வேளை படகின் இயந்திரம் பழுதடைந்த காரணத்தால் நடுக்கடலில் தத்தளிப்பதாகக் கரைக்குத் தகவல் அனுப்பியுள்ளனர். இருந்த போதிலும் அதன் பின்னர் எந்தத் தொடர்பும் கிடைக்கவில்லை என உறவுகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு காணாமல்போன படகு தொடர்பில் ☞2

## மங்களவின் நகர்வுகள் மீது ஆளுந்தரப்பு கழுகுப் பார்வை



முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் நகர்வுகள் தொடர்பில் அரசும், அரச சார்பு அமைப்புகளும் கழுகுப் பார்வை செலுத்தியுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தெற்கு அரசியலில் ஆட்சியைத் தீர்மானிக்கும் முக்கிய ☞2

## தமிழரின் போராட்டத்தை கொச்சைப்படுத்தாதீர்கள்

### அமைச்சர்களிடம் மைத்திரி வேண்டுகோள்



தீர்வுக்காகவும் நீதிக்காகவும் தமிழர்கள் ஜனநாயக வழியில் போராடினால் அந்தப் போராட்டத்தை எவரும் கொச்சைப்படுத்தக்கூடாது. தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வையும், பல்வேறு ☞2

## பாடசாலை மாணவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனைகள்

### கல்வி அமைச்சு தீர்மானம்



பாடசாலை மாணவர்களிடையே கொரோனாப் பரிசோதனைகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனக் கல்வி அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய எழுமாறான அடிப்படையில் ரெபிட் அன்டிஜன் பரிசோதனை நடத்தப்படவுள்ளது என்றும், தினமும் இரண்டு அல்லது மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த 30 மாணவர்களுக்கு குறித்த பரிசோதனைகளை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ☞2

# தமிழரை இரண்டாம்தர குடிகளாக மாற்றும் திட்டமே 'தமிழுக்குத் தடை'



### முன்னாள் எம்.பி. சரவணபவன் சாடல்

இலங்கையின் சுதந்திர தின நிகழ்வில் நாட்டின் தேசிய கீதம் சிங்கள மொழியில் மட்டுமே பாடப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால்குணரத்னகூறியிருக்கின்றமை, தமிழர்களை இரண்டாம் தரக் குடிமக்களாக மாற்றும் திட்டத்தின் ஒரு பகுதியாகவே நோக்கமுடியும். இது இனங்களிடையே ஒருபோதும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது. ☞2

### யாழில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள

## மக்களை மீளக்குடியமர்த்த அமைச்சரவை அங்கீகாரம்

யாழ்ப்பாணத்தில் உள்ளக இடம்பெயர்வுக்கு உள்ளாகி நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள காணியில்லாத மக்களைத் துரிதமாக மீளக்குடியமர்த்துவதற்கு அமைச்சரவை நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கே அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ☞2

## தென் மாகாண ஆளுநருக்கும் கொரோனாத் தொற்று உறுதி!



தென் மாகாண ஆளுநர் வில்லி கமகே கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்.

சுய தனிமைப்படுத்தலில் ஈடுபட்டு வந்த நிலையில், தனக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது என ஆளுநர் தெரிவித்துள்ளார்.

ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் கொரோனாத் தொற்றுக்கு ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## தமிழ் மொழியை மதிக்காத இலங்கையை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமக்கு விடுக்கப்பட்ட அழைப்பை நாம் ஏற்கமாட்டோம். எமது இருப்பிடங்களில், நாம் எமது சுதந்திர உணர்வைக் கொண்டாடுவோம். தமிழ் மொழிக்கு உரிய மரியாதையை தராத இலங்கை முழுமையான இலங்கை நாடல்ல.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

சிங்களத்தில் மட்டுமே தேசிய கீதமாம். இறுமாப்பாகச் சொல்கின்றார்கள். தமிழில் பாடினால் மட்டும் அதனால், தமிழ் பேசும் இலங்கையர் வீடுகளில் தேனும், பாலும் ஓடப்போவதில்லை. இதன்மூலம் குடி எழும்பியும் விடாது. குடி முழுகியும் விடாது. ஆனால், நாட்டை ஒன்றுபடுத்த கடவுள் தந்த, 'ஒரே மெட்டு, ஒரே அர்த்தம்' கொண்ட இரண்டு தேசிய கீதங்களையும் கூட ஒருசேர பாட முடியாத அளவில் இவர்கள் இனவாதத்தில் ஊறிப்போய் உள்ளார்கள்.

மேலை நாடுகளிலும் இனவாதம், நிறவாதம் இருந்தாலும், வெள்ளை இனவாதிகளுக்கு எதிராக, கறுப்பு அமெரிக்கர்களுக்கு ஆதரவாக, 'கறுப்பு உயிர் கனதியானது' என்று சொல்லி போராட, கோடிக் கணக்கான வெள்ளையர்களே அந்நாடுகளில் உள்ளார்கள்.

அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளில் இனவாதம் தோலின் நிறத்தில் உள்ளது. இலங்கையில் இங்கே அது ஆன்மாவில் ஊறியுள்ளது.

முன்னாள் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் என்ற முறையில், நான், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரிடம் கடைசி நிமிட அழைப்பாக, இலங்கைத் தாயைப் போற்றும், தமிழிலாலான தேசிய கீதத்தையும் பாடி, தேசிய ஒருமைப் பாட்டைக் கட்டியெழுப்பி, நாம் முன்னோக்கிச் செல்வோம். அதன்மூலம், நாமும் இந்த நாட்டுக்கு உடைமையாளர்கள் என்ற உணர்வை தமிழ் பேசும் சுமார் ஐந்து மில்லியன் இலங்கையர்களின் மனங்களில் ஏற்படுத்துவோம் நேற்று கூறியிருந்தேன்.

ஆனால், இவர்களைத் திருத்த முடியவில்லை. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் எவ்வளவு அடிவாங்கினாலும், திருந்தா ஜன்மங்கள். பல வர்ண பூக்கள் நிறைந்த பூங்கா எவ்வளவு அழகாக இருக்கும் என்பதை உணரத் தெரியாத பிற்போக்கு வாதிகள். உலகமே அந்தந்த நாடுகளில், பல்லின, பன்மத, பன்மொழி அடங்கிய பன்மைத் தன்மைகளை கொண்டாடி மகிழும், இவ்வேளையில், இவர்கள் நாட்டைப் பின்னோக்கி அழைத்துச் செல்கின்றார்கள்.

எங்கள் மொழிக்கும், மதத்துக்கும், இனத்துக்கும், இலங்கை நாட்டுக்குள்ளே கௌரவமான இடம் தராத இன்றைய இலங்கையை ஒரு சுதந்திர நாடாக ஏற்றுக்கொள்ள நாம் தயாரில்லை என இவர்களுக்கு உணர்த்துவோம்.

65 வருடங்களுக்குப் பிறகு, கடந்த எமது நல்லாட்சியில், நாம் முன்னின்று போராடி பெற்ற, தமிழ்த் தேசிய கீதம் பாடும் உரிமையை, இடைநிறுத்திவிட்டு, இவர்கள் கொண்டாடும் சுதந்திர நிகழ்வுக்கு, எமக்கு விடுக்கப்பட்ட அழைப்பை நாம் ஏற்கமாட்டோம். எமது இருப்பிடங்களில் நாம் எமது சுதந்திர உணர்வைக் கொண்டாடுவோம். தமிழ் மொழிக்கு உரிய மரியாதையைத் தராத இலங்கை முழுமையான இலங்கை நாடல்ல.

தமிழர்களையும், முஸ்லிம்களையும் மொழி, மத, இன அடிப்படைகளில் தூரத் தள்ளி வைத்து, இரண்டாம், மூன்றாம் தர பிரஜைகளாக நடத்தும் இன்றைய அரசுக்குள்ளே அடைக்கலம் புகுந்து, இந்த இனவாத அரசுக்கு ஓர் ஏற்புடைமை ஏற்படுத்தி கொடுக்க முயலும் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது. - என்றுள்ளது.

## புதிய பிரேரணையால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல் கட்டமாக இலங்கை அரசு இந்தியாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ள நிலையில் இது தொடர்பில் இந்தியா பரிசீலித்து வருகின்றது எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளில் 15 நாடுகளின் ஆதரவைப் பெறும் நடவடிக்கைகளை இலங்கை அரசு முன்னெடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவும் ரஷ்யாவும் ஏற்கனவே இலங்கைக்கு சர்வதேச அரங்கில் ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மங்களவின் நகர்வுகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புள்ளிகளில் ஒருவராக மங்கள சமரவீர திகழ்ந்தார். சர்வதேச மட்டத்தில் அவருக்குப் பாரியதொரு வலைப்பின்னல் இருக்கின்றது.

பௌத்த தேரர்கள் சிலரின் செயற்பாடுகளை வெளிப்படையாக விமர்சித்ததாலும், அவர் பௌத்த மதத்துக்கு எதிரானவர் என்ற தொனியில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர் பரப்புரைகளை முன்னெடுத்ததாலும் பௌத்தர்கள் மத்தியில் மங்களவுக்கான செல்வாக்கு சரிந்துள்ளது. நாடாளுமன்ற அரசியலுக்கு மங்கள விடை கொடுப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். ஆனாலும், சர்வதேச மட்டத்தில் மங்களவுக்கான செல்வாக்கு குறையவே இல்லை. அவரை ஜனநாயகப் போராளியாகவே மனித உரிமை செயற்பாட்டாளர்கள் பார்க்கின்றனர்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்றுள்ளார். முக்கிய பதவிகளுக்கு இராஜதந்திரத் துறையில் தேர்ச்சி பெற்றவர்களை நியமித்து வருகின்றார். சமந்தா பவர் உட்பட இலங்கைக்கு நெருக்கடி கொடுத்த பலர் முக்கிய பதவிகளுக்குத் தெரிவாகியுள்ளனர்.

அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சி ஆட்சியானது, கொழும்புக்குத் தலையிடியையும், நெருக்கடியையும் கொடுக்கும் ஆட்சியாகும். ஜெனிவாவில் பிரேரணைகள் நிறைவேறுவதற்குக் கூட ஜனநாயகக் கட்சியின் ஆட்சியே காரணமாக அமைந்தது. மங்களவுக்கு நெருக்கமான பலர் ஜனநாயகக் கட்சியில் இருக்கின்றனர்.

மறுபுறத்தில் மங்கள பலமானதொரு சிவில் அமைப்பை உருவாக்கி வருகின்றார். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மங்களவின் நகர்வுகள் ஆளுந்தரப்பால் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றன.

## தமிழரின் போராட்டத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்னல்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதியையும் வழங்குவது ஆட்சியாளர்களின் கடமையாகும். அப்போது தான் நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு தமிழர்கள் அரசுக்கு எதிராகப் போராட்டங்கள் - ஆர்ப்பாட்டங்கள் நடத்தி எதைச் சாதிக்கப் போகின்றார்கள் என்று அமைச்சர்கள் சிலர் எழுப்பியுள்ள கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த எமது ஆட்சியில் தமிழர்களின் மனதை நாம் வென்றிருந்தோம். அதேவேளை, சர்வதேச சமூகத்தின் மனதையும் வென்று காட்டியிருந்தோம். ஆனால், இந்த ஆட்சியில் அவற்றை ஏன் சாதிக்க முடியாமல் உள்ளது என்பது தொடர்பில் அரசு ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதைவிடுத்து இன முறுகலை மேலும் வலுவடையைச் செய்யும் விதத்திலும், சர்வதேச மட்டத்தில் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையிலும் அரசியலிலுள்ளசிலர்கருத்துக்கள்வெளியிடுகின்றமையை உடன் நிறுத்த வேண்டும்.

இது தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவரும் கவனம் செலுத்த வேண்டும். பிரச்சினைகளை ஏற்படுத்த முனைவோரை ஜனாதிபதியும் பிரதமரும் தூரத்தில் வைத்திருக்க வேண்டும். அவர்களைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு ஆட்சியைத் திறம்பட முன்னெடுக்க முடியாது.

இந்த அரசில் நாம் முக்கிய பங்காளிக் கட்சியாக இருக்கின்றோம். ஆனால், எமது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஓரங்கட்டுவதில் அரசிலுள்ள மேற்படி உறுப்பினர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் செயற்பட்டுக்கொண்டு வருகின்றனர். அவர்கள் எமக்கும் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கும் இடையில் பிரச்சினைகளை ஏற்படுத்துவதில் குறியாக உள்ளனர். ஆனால், நாம் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் உரிய கௌரவத்தை வழங்கி வருகின்றோம்.

நாடு இன்று நாலா புறங்களிலிருந்தும் நெருக்குவாரங்களைச் சந்திக்கத் தொடங்கியுள்ளது. இதிலிருந்து நாட்டை மீட்டெடுக்க ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவருக்கும் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்க நாம் தயார். ஆனால், நாட்டின் முக்கிய இடங்களை சர்வதேச நிறுவனங்களுக்குத் தாரைவார்க்க நாம் சம்மதிக்கமாட்டோம். - என்றார்.

## இலங்கையில் வைத்தி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார். கொரோனாவால் இலங்கையில் உயிரிழந்த முதலாவது வைத்தியர் இவராவார்.

## தமிழரை இரண்டாம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈ.சரவணபவன்.

அவர் இன்று விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் உள்ளவை வருமாறு:-

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்னவின் கருத்து மீண்டும் ஓர் இன ரீதியான சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இனங்களுக்கிடையே ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, இரு சமூகங்களைச் சேர்ந்த மக்களிடையே உள்ள இடைவெளியை மேலும் விரிசலடையச் செய்து அரசியல் இலாபம் தேடுவதில் கோட்டாபய ராஜபக்ஷ நிர்வாகம் முனைப்புடன் செயற்படுகின்றமை தெரிகின்றது.

தற்போதைய அரசின் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, தமிழர்கள் தேசிய கீதம் பாடக்கூடாது என்று அவர்கள் சட்டம் இயற்றினாலும் ஆச்சரியப்பட முடியாத நிலைமையே இருக்கின்றது.

தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தனது பரிந்துரையில் சிங்கள மற்றும் தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்படுவதை ஊக்குவித்திருந்தது.

தேசிய கீதம் இசைப்பது என்பது ஒரு நாட்டின் பிற தேசிய அடையாளங்களைப் போலவே, நாட்டிலும், அதன் சமூகத்திலும், அதன் மக்களிடமும் பொதிந்துள்ள பாரம்பரியம், வரலாறு மற்றும் அவை சார்ந்த நம்பிக்கைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு செயற்பாடே.

பெரும்பான்மை இனத்தவர், சிறுபான்மையினரின் உணர்வுகளை மதித்து அவர்கள் நாட்டின் மேல் கொண்டுள்ளவற்றை ஊக்குவிக்கவும், அதற்கு இடமளிக்கும் வகையிலும் நடந்துகொள்ள வேண்டும். அதனால் ஏற்படும் நன்மைகள் தொடர்பாக பெருமைப்படவும் வேண்டும். அனைவருக்கும் புரியும் வகையில் அவரவர் மொழியில் தேசிய கீதத்தை இசைப்பதே ஒற்றுமையின் வெற்றி என நான் கருதுகின்றேன். - என்றுள்ளது.

## தென் மாகாண .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளானமையைத் தொடர்ந்து, ஆளுநர் சுய தனிமைப்படுத்தலில் ஈடுபட்டார்.

ஆளுநர் வில்லி கமகே தேசிய தொற்று நோய் சிகிச்சை நிலையத்துக்கு மாற்றப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இதுவரையில் அமைச்சர்கள் உள்ளிட்ட 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மக்களை மீளக்குடிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் வாழும் காணி இல்லாத 381 குடும்பங்களுக்கு 7 லட்சம் ரூபா செலவில் தலா 20 பேர்ச் காணியை வழங்க ஏற்கனவே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 409 குடும்பங்களில் 233 குடும்பங்களுக்குக் காணிகள் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தங்களது பிறப்பிடத்தை அண்மித்த பகுதியில் காணிகளை வழங்குமாறு இந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எவ்வாறாயினும் தற்போதைய பெறுமதிக்கு அமைய குறித்த பிரதேசத்தில் 7 லட்சம் ரூபாவுக்கு 20 பேர்ச் காணியை கொள்வனவு செய்ய முடியாதென்பது தெரியவந்துள்ளது.

இதனால் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட அதே தொகைக்கு அரச விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டுக்கு அமைய 10 தொடக்கம் 20 பேர்ச்சஸ் வரையிலான காணியைத் தனியார் உரிமையாளர்களிடமிருந்து கொள்வனவு செய்து வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வீடுகளை நிர்மாணிப்பதற்கான பொறிமுறையைத் தயாரித்து மக்களின் மீள்குடியேற்றத்தைத் துரிதப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## பாடசாலை மாணவர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பரிசோதனை நடவடிக்கைகள் மூலம் பாடசாலைகளை மீண்டும் திறப்பது தொடர்பாக முடிவுகளை எடுப்பதற்கும் மாணவர்கள் மத்தியில் பரவுகின்ற கொரோனா வைரஸின் தன்மையைக் கண்டறியவும் வழிவகுக்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

மேலும், கொழும்பில் உள்ள மூன்று பாடசாலைகளில் இந்தத் திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

## மணிவண்ணன் உட்பட .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்டு யாழ்ப்பாணம் மாநகர சபையில் உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்ட 13 உறுப்பினர்களில் தற்போதைய மேயர் மணிவண்ணன் உட்பட 4 பேர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டிருந்தனர்.

குறித்த நால்வரும் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் அதற்கு எதிராக வழக்குத் தொடுத்தபோது வழக்கு முடியும் வரையில் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது.

இவ்வாறு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை நீக்கக் கோரியே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் யாழ். மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கே நாளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

## மன்னார் மீனவர்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறவுகளால் கடற்றொழில் நீரியல்வளத் துறை திணைக்களத்துக்குத் தகவல் தெரிவிக்கப்பட்ட நிலையில் திணைக்களம் கடற்படையினருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். இதேநேரம், காணாமல் போன படகு மூன்று மீனவர்களுடன் அலையில் இழுத்துச் செல்லப்பட்டு இந்தியாவின் கரையை அடைந்திருக்கும் என்ற சந்தேகமும் எழுப்பப்படுகின்றது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கொழும்பின் கோமாளித்தனம்

நாடுகளுக்கு இடையில் சர்வதேச உறவாடலில் ஒரு விடயம் – முக்கிய அம்சம் – உள்ளது.

உறவாடல் விவகாரங்களில் நாடுகளின் அரசாங்கங்கள் (Governments) மாறலாம். ஆனால் அரசுகளின் (States) நிலைப்பாடுகள் மாறக் கூடா.

இந்த விடயத்தில் இலங்கையின் நிலைமை தலைகீழானது. தேர்தல்களின் போது அரசாங்கங்கள், அவற்றின் தலைவர்கள் மாறும் போது நாட்டின் – அரசின் – நிலைப்பாடும் தலைகீழாக மாறுகின்றது. அதனால் இலங்கைத் தீவின் அரசுடன் மேற்கொள்ளப்படுகின்ற சர்வதேச உறவாடல்கள் தலைகீழாகின்ற நிலைமை ஏற்படுகின்றது.

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் நிகழ்ந்த யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை தொடர்பில் உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, இழப்பீடுகளை வழங்கி, மீள நிகழாமையை உறுதிப்படுத்துவது தொடர்பில் 2015 முதல் 2019 வரை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் மூலமான சர்வதேசத்துடன் பல உடன்பாடுகளைக் கண்ட இலங்கை நாடு – அரசு – இப்போது தேர்தலின் பின்னர் இங்கு அரசாங்கம் மாறியதும் குத்துக்கரணம் அடித்துள்ளது.

இப்படி, தான் செய்து கொண்ட சர்வதேச உடன்பாடுகள், பட்டயங்கள், ஒப்பந்தங்களில் இருந்து கண்மூடித்தனமாக விலகி, தனது கடப்பாடுகளைத் துறந்து, பொறுப்பின்றிச் செயற்படும் இலங்கை நாடு, அதன் மூலம் சர்வதேச உறவாடல்களில் அவநம்பிக்கைக்குரிய – நம்ப முடியாத – நாடாக அடையாளப்படுத்தப்படும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

இலங்கையின் இந்தக் குத்துக்கரணப் போக்கின் தாக்கத்தை இந்தியா மீண்டும் ஒரு தடவை நேரடியாக எதிர்கொள்ளும் அவல நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

1976 இன் இலங்கை – இந்திய கடல் எல்லை ஒப்பந்தத்தில் கச்சதீவில் இந்திய மீனவர்கள் தமது வலைகளைக் காயப்போட உரிமை உள்ளது என்று ஏற்றுக்கொண்ட இலங்கை, இப்போது இந்திய மீனவர்களை அதனை நெருங்கவே விடுவதாக இல்லை.

1987 இல் இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட கொழும்பு, அந்த உடன்பாட்டு வாசகங்களை ஒவ்வொன்றாகக் கடாசித் தூக்கி எறிந்து தனது கைவரிசையைக் காட்டி வருகின்றது. இந்தியாவும் ஏமாளியாக சகித்துப் பார்த்து இருந்து வருகின்றது.

1987 ஜூலையில் இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான போது, அதில் சர்ச்சைக்குரிய விவகாரமாக, ஊன்றிக் கவனிக்கப்பட்டு, சேர்த்துக் கொள்ளப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டது இலங்கையின் வடக்கு – கிழக்கு மாகாணங்களின் இணைப்பாகும்.

நீதிமன்றத்தைக் காட்டி அதை வெட்டி எறிந்தது கொழும்பு. இந்தியாவுக்கு சர்வதேச உடன்பாடு மூலம் தான் அளித்த வாக்குறுதியைக் குப்பையில் தூக்கி எறிந்தது. இலங்கை, இந்திய உடன்பாட்டு வாசகங்களின் நடைமுறையாக்கத்துக்காகக் கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்த்தில் அதிகாரப் பகிர்வுக்கு வழி செய்த சரத்துக்கள் காலத்திற்குக் காலம் வந்த சிங்கள அரசுகளால் புதிய புதிய சட்டங்கள் மூலம் நீர்த்துப் போகச் செய்யப்பட்டன.

அதாவது, இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுவதாகக் காட்டிக் கொண்டு வரப்பட்ட சரத்துகள், சட்ட ஏற்பாடுகள் ஒவ்வொன்றாக விலக்கப்பட்டமை மூலம் சர்வதேச உடன்பாட்டை – இணக்கத்தை – ஒரு தலைப்பட்சமாக மீறி வந்தது கொழும்பு. இந்தப் பிராந்தியத்தின் வல்லரசாகத் தன்னை மிதப்போடு அடையாளப்படுத்திக் கொள்ளும் புதுடில்லி, அந்த ஏமாற்று நடவடிக்கை தொடர்பில் பதில் நடவடிக்கை ஏதும் எடுக்க இயலாமல் இயக்கமின்றி இருந்தது என்பதும் உண்மை.

இப்போதும், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்யும் விடயத்திலும் தனது பரவணிப் பண்பியலைக் காட்டி நிற்கின்றது கொழும்பு.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருடங்கள் சீனாவுக்குக் குத்தகைக்கு வழங்கிய கொழும்பு, அதற்குப் பதிலீடாக – சகாயமாக – கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கும், ஜப்பானுக்கும் சேர்த்து கூட்டாக அபிவிருத்தி செய்வதற்கு வழங்க முன்வந்தது. அதற்கான முத்தரப்பு ஒப்பந்தமும் 2019 ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்டது.

இப்படி சர்வதேச ரீதியில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்று இருக்கையில், அதனைக் கண்மூடித்தனமாக நிராகரித்து செயற்பட முடியாது என்ற யதார்த்தத்தை – நிஜ நிலைமையை – நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஓரிரு வாரங்களுக்கு முன்னர் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

ஆனால், அப்படியிருக்க கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்க முடியாது என இப்போது கொழும்பு எகிறுகின்றது.

முத்தரப்பு ஒப்பந்தத்துக்குத் தொடர்ந்து கட்டுப்பட வேண்டும் என்றும், அந்த ஒப்பந்தம் தொடர்பில் தனது அர்ப்பணிப்பை – பற்றுறுதியை – திடசங்கற்பத்தை – கொழும்பு மீளவும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்தியிருக்கின்றது.

கடந்த எழுபது ஆண்டு காலமாகத் தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தில் சிறுபான்மையினரான தமிழர்களுக்குக் காலத்திற்குக் காலம் வாக்குறுதி அளித்து, அதை அவ்வப்போது மீறியதே – ஏமாற்ற நடவடிக்கையே – இலங்கையின் பண்பியல்பு. அதை இப்போது மீண்டும் ஒரு தடவை அனுபவத்தில் படிக்கின்றது புதுடில்லி. அவ்வளவே.

# சுகாதார ஆலோசனை வழிகாட்டுதலுடன் சுதந்திர தினக் கொண்டாட்ட நிகழ்வுகள்!

## சமல் ராஜபக்ஷ அறிவிப்பு



இலங்கையின் 73 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் ஏனைய வருடங்களைப் போலவே இம்முறையும் கொண்டாடப்படும்.

எனினும் இந்த ஆண்டு கொவிட் தொற்று அச்சுறுத்தல் காரணமாக பல சுற்று பேச்சுகளின் பின்னர் சுகாதார ஆலோசனை வழிகாட்டல்களுக்கு அமைய பாதுகாப்பான முறையில் கம்பீரம் குறையாதவாறு கொண்டாட்டங்கள் நடைபெறும் என்று அரச பாதுகாப்பு மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

73 ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று திங்கட்கிழமை இணையவழியூடாக நடைபெற்றது. இதன் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் வழமையைப் போன்று அதன் கம்பீரம் குறையாமல் நடைபெறும். எனினும் இம்முறை கொவிட் அச்சுறுத்தல் காணப்படுவதால் சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளுக்கமைய கட்டுப்பாடுகளுடன் இடம்பெறும்.

நாளை (இன்று) முதல் மத வழிபாடுகள் ஆரம்பமாகும். சுதந்திர சதுக்கத்தில் மத வழிபாடுகள் ஆரம்பமாகும். அத்தோடு வழமையைப் போன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வருகையை அடுத்து முப்படையினரின் மரியாதை அணிவகுப்பு மற்றும் கலாசாரப் பேரணி என்பனவும் நடைபெறும்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு சகல மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம சேவகர் பிரிவுகள் மட்டத்தில் மர நடுகை செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. பெப்ரவரி முதலாம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை சகல அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், வீடுகள் உள்ளிட்டவற்றில் தேசியக் கொடியை பறக்கவிடுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. – என்றார்.

# 95 ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு இதுவரை தடுப்பூசி செலுத்தப்பட்டது!

இலங்கையில் இதுவரை 95 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனகா கொவிஷீல்ட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

கடந்த 29 ஆம் திகதி முதல் தடுப்பூசி செலுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. குறித்த தினத்தில் சுகாதார ஊழியர்கள் மற்றும் பாதுகாப்புப் படைகளின் உறுப்பினர்கள் உட்பட 5 ஆயிரத்து 286 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது.

அத்தோடு, நேற்றைய தினம் மாத்திரம் 36 ஆயிரத்து 396 பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன எனத் தொற்று நோய் விஞ்ஞானப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் மொத்தமாக இதுவரையில் 95 ஆயிரத்து 550 பேருக்கு ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா ஜெனகா கொவிஷீல்ட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப்பிரிவு தெரிவித்துள்ளது.

சீரம் இன்ஸ்டிடியூட் ஓப் இந்தியாவால் தயாரிக்கப்பட்ட ஒக்ஸ்போர்ட் – அஸ்ட்ராஜெனெகாவின் 5 லட்சம் கொவிஷீல்ட் தடுப்பூசிகளை இந்தியா இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியது.

குறித்த தடுப்பூசிகள் ஜனவரி 28 ஆம் திகதி நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 65 ஆயிரத்தை அண்மிக்கும் கொரோனாத் தொற்றாளர்கள்!

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் 826 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, இலங்கையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 64 ஆயிரத்து 983 ஆக உயர்வடைந்துள்ளது.

அவர்களில் 58ஆயிரத்து 75 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர். இந்த நிலையில், தொற்றுக்கு உள்ளான ஆறாயிரத்து 585 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

அத்துடன், இலங்கையில் கொரோனா தொற்றால் இதுவரை 323 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க வெளியுறவுச் செயலருக்கு காணாமற்போனோர் உறவுகள் கடிதம்!

மனித உரிமைபேரவையில் எமது ஆலோசனைகளையும் ஆதரிக்கும்படி தெரிவித்து வவுனியாவில் கடந்த 1,445 ஆவது நாளாக தொடர்போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் போனவர்களின் உறவினர்கள், அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் அந்தோனி பிளிங்கினுக்கு கடிதம் எழுதியுள்ளனர் எனத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வவுனியாவில் நேற்று (திங்கட்கிழமை) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர்கள் –

புதிய அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் அந்தோனி பிளிங்கினுக்கு நாங்கள் ஒரு கடிதம் எழுதியுள்ளோம் அதில் 8 ஆண்டுகளாக யு.என்.எச்.ஆர்.சியில் தமிழர்களை ஆதரித்தமைக்கு அவரது அமெரிக்க நாட்டுக்கு நன்றி தெரிவித்தோம்.

இந்த மார்ச் மாதத்தில் யு.என்.எச்.ஆர்.சியில் எங்கள் ஆலோசனையை ஆதரிக்கும்படி நாங்கள் அவரை வலியுறுத்தியுள்ளோம்.

அந்தவகையில், இலங்கையின் போர்க் குற்றம், தமிழ் இனப்படுகொலை மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களுக்கான சர்வதேச குற்றவியல் விசாரணைகளுக்கு ஐ.சி.சி. அல்லது இலங்கை தீர்ப்பாயத்தின் தேவை தொடர்பிலும், சிங்களவர்களின் எதிர்கால ஆக்கிரமிப்பு, தாக்குதலில் இருந்து தமிழர்களைப் பாதுகாக்க, எங்களுக்கு அரசியல் தீர்வை நிர்ணயிப்பதற்கான வாக்கெடுப்பின் அவசியம் தொடர்பிலும், இலங்கையில் சிரியா அல்லது மியன்மார் பாணி விசாரணைக்கு நாங்கள் கோரியமை, நமது தாயகத்தில் கொடூரமான இலங்கை இராணுவத்தை அகற்ற ஐ.நா. அமைதிகாக்கும் படையை அனுப்புதல் இவை நிறைவடையும் வரை அல்லது ஆரம்பிக்கப்படும் வரை யு.என்.எச்.ஆர்.சி. ஓய்வெடுக்கக்கூடாது என்று நாங்கள் விரும்புகிறோம்.

யு.என்.எச்.ஆர்.சியில் 47 உறுப்பு நாடுகள் மாத்திரமே இருக்கின்றன. இவர்களை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் கையாளுவது சுலபம், 193 உறுப்பினர்கள் இருக்கும் ஐ.நா. பொதுச் சபையை கையாளுவது தான் மிகவும் கடினமானது. ஒபாமா பரிந்துரைத்தபடி, தமிழர்கள் ஐ.நாவை நம்பக்கூடாது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஐ.நா. தமிழர்களைத் தவறவிட்டால், எங்கள் இலக்குகளை அடைய மாற்று வழி இருக்க வேண்டும். நாங்கள் எதிர்கொள்ளும் எங்கள் பிரச்சினையைத் தீர்க்க இலங்கையில் அமெரிக்க தலையீட்டை தமிழர்கள் அழைக்க வேண்டும் என்று நாங்கள் பரிந்துரைத்துள்ளோம். – என்று தெரிவித்தனர்.




## இந்திய கடலோர காவல் படையினரின் எழுச்சி நாள் கொண்டாட்டம் சென்னையை அடுத்த கடல்பகுதியில் ரோந்துக் கப்பல்கள் அணிவகுப்பு

இந்திய கடலோர காவல் படையினரின் எழுச்சி நாள் கொண்டாட்டம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்றது.

சென்னையை அடுத்த கடல் பகுதியில் இந்தியக் கடலோர காவல் படையின் ரோந்துக் கப்பல்களும் ஹெலிக்கொப்டர்களும் சாகசங்களை நிகழ்த்தின.

கரையோரம் கப்பல்கள் அணிவகுத்து நின்றன. ஹெலிக்கொப்டர்கள் கடலில் மூழ்கியவர்களை மீட்கும் நடவடிக்கை, பாதுகாப்பு நடவடிக்கை போன்றவற்றின் ஒத்திகைகளை நிகழ்த்தின.

# இஸ்ரேலியர்களுக்கு இந்தியாவில் உரிய பாதுகாப்புகள் அளிக்கப்படும்

## பிரதமர் மோடி உறுதியளித்தார்



இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவுடன் பிரதமர் மோடி தொலைபேசியில் பேசினார்.

டெல்லியில் இஸ்ரேலின் தூதரகம் அருகே கடந்த 29 ஆம் திகதி சிறிய குண்டு வெடித்த நிலையில் இஸ்ரேல் மக்களுக்கு இந்தியாவில் உரிய பாதுகாப்பு அளிக்கப்படும் என்று மோடி உறுதியளித்துள்ளார். இந்த தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகள் மீது, கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மோடி உறுதியளித்தார்.

இதனைத் தொடர்ந்து இரு தலைவர்களும், கொரோனாத் தொற்றுப் பரவலை தடுக்க இரு நாடுகளும் இணைந்து செயற்படுவது பற்றியும் ஆலோசித்தனர்.

முன்னதாக தூதரகம் அருகே நடந்த பயங்கரவாதத் தாக்குதல் என, இஸ்ரேலிய தூதரகம் உறுதி செய்தது. விசாரணையில் இந்திய அதிகாரிகளுக்கு உதவ இஸ்ரேல் புலனாய்வு நிபுணர் குழு இந்தியா வந்துள்ளது. என்பது குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார வளர்ச்சிக்கு புத்துணர்வு அளிக்கும் பட்ஜெட்



எடியூரப்பா கருத்து

இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்துள்ள பட்ஜெட், சரிந்துள்ள பொருளாதாரத்தை மீட்டெடுக்க உதவும். கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நமது நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் சரியான பாதையில் கொண்டு செல்ல இந்த பட்ஜெட் ஒரு மிகப்பெரிய ஊக்கமாக அமையும். கொரோனாப் பரவலுக்கு மத்தியில் இதைவிட ஒரு சிறப்பான பட்ஜெட்டை எதிர்பார்க்க முடியாது.

இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு :-

இந்த நெருக்கடிக்கு மத்தியிலும் இந்த பட்ஜெட், ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளது. கொரோனாவைக் கட்டுப்படுத்தவும், பொருளாதாரத்தை சீர்செய்யவும் பட்ஜெட்டில் பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. கொரோனா தடுப்பூசி போடும் பணிக்கு ரூ.35 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தேவைப்பட்டால் மேலும் நிதி ஒதுக்கீடு செய்வதாக உறுதி அளிக்கப்பட்டுள்ளது. இது வரவேற்க வேண்டிய விடயம்.

விவசாயத்துறையை பலப்படுத்துதல், திறன் மேம்பாடு, கட்டமைப்பு வளர்ச்சி திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. பிரதமர் மோடியின் விருப்பப்படி விவசாயிகளின் வருமானத்தை 2 மடங்காக அதிகரிக்க இந்த பட்ஜெட் உதவும். விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கு ரூ.16.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாய சந்தைகளின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நுண்ணிய நீர்ப்பாசன திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 2 மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. இது விவசாயிகளுக்கு பெரும் உதவியாக இருக்கும். ரயில்வே வளர்ச்சிக்கு ரூ.1.07 லட்சம் கோடி நிதி ஒதுக்கப்பட்டு இருப்பதை வரவேற்கிறேன். பெங்களூரு மெட்ரோ ரயில் திட்ட பணிகளுக்கு ரூ.14 ஆயிரத்து 778 கோடி ஒதுக்கி இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்த நிதி ஒதுக்கீடு காரணமாக பெங்களூருவில் கூடுதலாக 58 கிலோ மீற்றர் நீளத்திற்கு மெட்ரோ ரயில் பாதை அமைக்க முடியும். இது கர்நாடகத்திற்கு மிகப்பெரிய பரிசாகும். பாரத் மாலா திட்டத்தில் சாலைகளை மேம்படுத்த ரூ.3.30 லட்சம் கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மின்சாரத்துறைக்கு ரூ.3 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. பஸ் போக்குவரத்துக்கு ரூ.18 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது நகரங்களில் வாகன நெரிசலை குறைக்க உதவும். சுகாதாரத்துறைக்கு ரூ.2.23 லட்சம் கோடி ஒதுக்கி இருப்பதை வரவேற்கிறேன்.

75 வயதுக்கு மேற்பட்ட மூத்த மக்கள் வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டிருப்பது வரவேற்கக்கூடியது. மொத்தத்தில் இந்த பட்ஜெட், பொருளாதார வளர்ச்சிக்கு புத்துணர்ச்சி அளிக்கும் பட்ஜெட். அத்துடன் வளர்ச்சி திட்டங்களுக்கு வேகம் கொடுப்பதாகவும் பட்ஜெட் அமைந்துள்ளது. மத்திய அரசின் இந்த பட்ஜெட்டை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

– இவ்வாறு எடியூரப்பா தெரிவித்துள்ளார்.

# புதிய நாசா செயல் தலைவராக இந்திய வம்சாவளி பெண் நியமனம்



இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டவரான அமெரிக்க குடியுரிமை பெற்ற பாவ்யா லால் நாசா ஊழியர்களின் செயல் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஜோ பைடன் துணை அதிபராக இருந்த போது பல்வேறு பொறுப்புகள் வகித்தவர் பாவ்யா லால். பொறியியல் மற்றும் விண்வெளித் தொழில் நுட்பத்தில் சிறந்த பயிற்சி மிக்கவரான பாவ்யா லால் நியமனம் குறித்து நாசா அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

## பஞ்சாப், ராஜஸ்தான் உட்பட 7 மாநிலங்களில் கடும் பனி; போக்குவரத்துப் பாதிக்கப்பட்டதால் மக்கள் பெரும் அவதி

இந்தியாவில் குளிர்கால பருவ நிலையை தொடர்ந்து வடமாநிலங்களில் அதிக பனிப்பொழிவு வீசி வருகிறது. இந்நிலையில், இந்திய வானிலை ஆய்வு மையம் இன்று வெளியிட்டுள்ள செய்தியில், பஞ்சாப், வடமேற்கு ராஜஸ்தான் மற்றும் உத்தர பிரதேசத்தின் சில பகுதிகளில் அடர் மற்றும் அதிக அடர்பனி பதிவாகி உள்ளது.


டெல்லி, பீகார், அசாம் மற்றும் திரிபுரா ஆகிய 4 மாநிலங்களில் மித அளவிலான பனி படர்ந்துள்ளது. கடும் பனியால் இன்று காலை 5.30 மணிக்கு பின்னரே ஓரளவுக்கு பார்க்க முடிந்தது.

பரேலி, லக்னோ மற்றும் கோரக்பூரில் தெளிவற்ற வானிலையால் சுமார் 25 மீற்றர் தொலைவிலுள்ள பொருள்களையே காண முடிந்தது. கங்காநகர், பாட்டியாலா, பஹ்ரைச் மற்றும் பூர்னியாவில் சுமார் 50 மீற்றர் தொலைவிலுள்ள பொருள்களையும், தேஜ்பூர் மற்றும் நாலியாவில் சுமார் 200 மீற்றர் தொலைவிலுள்ள பொருள்களையும் காண முடிந்தது.

கடந்த சில நாள்களாக பல மாநிலங்களில் காலையில் வெப்ப நிலை 10 டிகிரிக்கும் குறைவாக பதிவாகி வருகிறது. டெல்லியில் இன்று குறைந்தபட்ச வெப்பநிலை 5 டிகிரி செல்சியஸ் ஆக இருக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

தெளிவற்ற வானிலையால் அந்தப் பகுதிகளில் சாலைகளில் செல்லும் பஸ், கார் மற்றும் இரு சக்கர வாகனம் உள்ளிட்ட வாகனப் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் வேலைக்கு செல்லும் மக்கள் அவதிக்குள்ளாகி இருக்கின்றனர். அவர்களின் அன்றாட வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது.

# விவசாயிகள் போராட்ட விவகாரம்: நாடாளுமன்றில் எதிர்க்கட்சி அமளி



இந்திய அரசின் விவசாய சட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், அதை திரும்ப பெறக்கோரியும் விவசாயிகள் டெல்லியின் எல்லைப் பகுதிகளான காஜிப்பூர், சிங்கு, திக்ரி ஆகிய இடங்களில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

விவசாயிகளுடன் மத்திய அரசு பல கட்டங்களாக பேச்சு நடத்தியது. இதில் எந்தவித உடன்பாடும் ஏற்படாதமையால் போராட்டம் தொடர்ந்து நீடித்து வருகிறது.

நாடாளுமன்றத்தில் பட்ஜெட் நேற்று தாக்கல் செய்யப்பட்டது. அப்போது நாடாளுமன்றத்தை நோக்கி பேரணி நடத்தப்படும் என்று விவசாயிகளின் சங்கங்கள் அறிவித்து இருந்தன. ஆனால் குடியரசு தினத்தன்று விவசாயிகளின் டிராக்டர் பேரணியில் ஏற்பட்ட வன்முறையை தொடர்ந்து நாடாளுமன்றத்தை நோக்கி ஊர்வலம் செல்லும் முடிவை விவசாய சங்கங்கள் கைவிட்டு இருந்தன.

டெல்லி எல்லைகளில் விவசாய போராட்டம் காரணமாக தொடர்ந்து பதற்றம் நிலவுவதால் அவர்கள் அத்துமீறி நுழையாமல் இருக்க சிமெண்ட் தடுப்புகள், முள் பாதைகள், பல அடுக்கு தடுப்புகள் என பாதுகாப்பை பொலிஸார் பலப்படுத்தி உள்ளனர்.

பட்ஜெட் தாக்கலுக்கு பின்பு நாடாளுமன்றம் இன்று கூடியது. கொரோனா முன் எச்சரிக்கை காரணமாக நாடாளுமன்ற மேல் – சபை காலையிலும், மக்களவை பிற்பகலிலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது.

அதன்படி இன்று காலை 9 மணிக்கு நாடாளுமன்ற மேல் – சபை கூடியது. விவசாய சட்டங்கள் குறித்தும், விவசாயிகளின் பிரச்சினை குறித்தும் விவாதிக்க வேண்டும் என்று காங்கிரஸ், தி.மு.க., ராஷ்டிரிய ஜனதா தளம், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஒத்திவைப்பு துண்டுப் பிரசுரத்தை அளித்து இருந்தன.

இதை மேல் சபை தலைவரும், துணை ஜனாதிபதியுமான வெங்கையா நாயுடு ஏற்க மறுத்து விட்டார்.

இது தொடர்பாக அவர் கூறும்போது, ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நாளை நடக்கிறது. அப்போது விவசாயச் சட்டங்கள் குறித்து விவாதிக்கப்படும். ஏற்கனவே ஜனாதிபதி உரையில் விவசாய சட்டம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டு விட்டது. இதனால் நாளை இது குறித்து விவாதிக்கப்படும் என்றார்.

வெங்கையா நாயுடுவின் பதிலை தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஏற்கவில்லை. விவசாயிகள் பிரச்சினை மிகவும் முக்கியமானது. இதனால் இந்த சட்டங்கள் தொடர்பாக இன்றே விவாதிக்க வேண்டும் என்று கூறி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. விவசாயிகள் போராட்டம் குறித்து விவாதிக்காததால் மத்திய அரசை கண்டித்து அவர்கள் வெளிநடப்பு செய்தனர்.

வெளிநடப்புக்கு பின்பு மீண்டும் அவைக்குள் வந்த எதிர்க்கட்சி எம்.பிக்கள் விவசாய சட்டங்கள், விவசாயிகள் போராட்டம் பற்றி விவாதிக்காததால் மத்திய அரசுக்கு எதிராக முழக்கமிட்டனர். இதனால் சபையில் கடுமையான கூச்சல் – குழப்பம் நிலவியது.

எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக 10.30 மணி வரை அவையை வெங்கையா நாயுடு ஒத்திவைத்தார்.

10.30 மணிக்கு சபை கூடியதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து இதே பிரச்சினையை முன் வைத்து கோஷமிட்டனர். இதன் காரணமாக 2 ஆவது முறையாக அவை 11.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் சபை கூடியதும் உறுப்பினர்களின் அமளி காரணமாக 3 ஆவது முறையாக அவை 12.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இதற்கிடையே டெல்லி எல்லையில் போராடி வரும் விவசாயிகளை சிவசேனா எம்.பி. சஞ்சய்ராவத் இன்று பிற்பகலில் சந்தித்து ஆதரவு அளித்தார்.

# சோமாலியாவில் பயங்கரவாதிகள் தாக்குதலில் இராணுவ ஜெனரல் ஒருவர் உட்பட 13 பேர் பலி



கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சோமாலியாவில் அல் கொய்தா பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய அல் பாப் பயங்கரவாதிகள் கடும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.இவர்கள் அங்கு இராணுவ வீரர்கள், பொலிஸார் மற்றும் அரசு அதிகாரிகளை குறி வைத்து தொடர் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

அதுமட்டுமன்றி தலைநகர் மொகாதிசுவில் உள்ள நட்சத்திர ஹோட்டல்களுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி வெளிநாட்டு விருந்தினர்களை கொன்று குவிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

மொகாதிசுவில் சர்வதேச விமான நிலையத்துக்கு அருகில் பிரபல நட்சத்திர ஹோட்டல் ஒன்று உள்ளது. சோமாலியா அரசின் மூத்த அதிகாரிகள் இந்த ஹோட்டலில் கூடுவது வழக்கம்.

அந்தவகையில் நேற்று முன்தினம் உள்ளூர் பொலிஸ் தலைமை அதிகாரி, மூத்த இராணுவ அதிகாரிகள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் இந்த ஹோட்டலில் குழுமியிருந்தனர். இதன் காரணமாக ஹோட்டலைச் சுற்றி பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வெடிகுண்டுகள் நிரப்பிய காரை செலுத்தி வந்த தற்கொலைப்படை பயங்கரவாதி ஒருவர் ஹோட்டலின் நுழைவாயில் மீது காரை மோதி வெடிக்கச் செய்தார்.வெடிகுண்டுகள் பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியதில் அந்தப் பகுதியே அதிர்ந்தது.

கார் குண்டுவெடிப்பை தொடர்ந்து துப்பாக்கிகளுடன் வந்த பயங்கரவாதிகள் 4 பேர், துப்பாக்கியால் சுட்டுக்கொண்டே ஹோட்டலுக்குள் நுழைந்தனர்.

அங்கு அவர்கள் தங்கள் தென்பட்டவர்களையெல்லாம் சுட்டனர்.பயங்கரவாதிகளின் இந்த கொடூரத் தாக்குதலில் ஹோட்டலில் இருந்த முன்னாள் இரா ணுவ ஜெனரல் ஒருவர் உட்பட 13 பேர் மரணமடைந்ததுடன் 10 இற்கும் மேற்பட்டோர் படுகாமடைந்தனர்.

இதற்கிடையில் இந்த சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்ததும் இராணுவ வீரர்கள் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று ஹோட்டலை சுற்றி வளைத்தனர்.

அதனைத் தொடர்ந்து பயங்கரவாதிகள் ஹோட்டலுக்குள் இருந்த சிலரை பிணைக் கைதியாக பிடித்து வைத்துக் கொண்டு, பொலிஸாருடன் துப்பாக்கி சண்டையில் ஈடுபட்டனர். இரு தரப்புக்கும் இடையே பல மணி நேரம் துப்பாக்கிச் சண்டை நீடித்தது. இறுதியில் தாக்குதலில் ஈடுபட்ட 4 பயங்கரவாதிகளையும் பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.

அதனைத் தொடர்ந்து பயங்கரவாதிகளால் பிணைக் கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டிருந்தவர்கள் உட்பட ஓட்டலில் இருந்த அனைவரையும் பொலிஸார் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

மேலும் இந்த தாக்குதலில் படுகாயமடைந்த 10 இற்கும் மேற்பட்டோரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தனர்.அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது. இந்த தாக்குதலுக்கு அல் பாப் பயங்கரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர்.

பயங்கரவாதிகளை ஒழிப்பதில் சோமாலியா இராணுவத்துக்கு உதவியாக இருந்து வந்த அமெரிக்க வீரர்கள் 700 பேரை திரும்பப் பெறும் முடிவை அமெரிக்கா அறிவித்த சில வாரங்களுக்குப் பின் இந்த கொடூரத் தாக்குதல் நடந்துள்ளது. எனவே படைவீரர்களை திரும்பப் பெறுவது சோமாலியாவில் அமைதியின்மைக்கு வழிவகுக்கும் என்ற அச்சம் உருவாகியுள்ளது.

# கறுப்பின சிறுமி மீது பொலிஸார் தாக்குதல் அமெரிக்காவில் மீண்டும் புதிதாக சர்ச்சை?




அமெரிக்க அரசியலில் கறுப்பின மக்களின் உரிமைகள், சமத்துவம், சம வாய்ப்புகள் பற்றிய பிரச்சினைகள் பல ஆண்டுகளாக முக்கிய பங்கு வகிக்கிறன.

அமெரிக்காவின் வெள்ளையின பொலிஸார் இனப்பாகுபாடு காட்டுவதாகவும் கறுப்பின குற்றவாளிகளிடம் மிகக்கடுமையாக நடந்து கொள்வதாகவும் காலாகாலமாக குற்றச்சாட்டு முன்வைக்கப்படுவதுண்டு.

இந்நிலையில், தற்போது ஓர் சம்பவம் அரங்கேறியுள்ளது. இது அமெரிக்க வெள்ளை இன பொலிஸார் மீது கடும் விமர்சனத்தை உருவாக்கியுள்ளது.

அமெரிக்காவின் ரோச்சஸ்டர் மாகாணத்தைச் சேர்ந்த மனநலம் பாதிக்கப்பட்ட 9 வயது சிறுமியை காவலர்கள் தங்கள் காருக்குள் ஏற்ற முற்பட்டனர். அப்போது சிறுமி கட்டுக்கடங்காமல் எதிர்த்து பொலிஸாரை தாக்கியதால் அவரைக் கட்டுப்படுத்த பெப்பர் ஸ்பிரே எனப்படும் காரத்தன்மை கொண்ட ஸ்பிரேயை சிறுமியின் முகத்தில் அடித்தனர்.

இது தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. சிறுமியைக் கைது செய்த வெள்ளையின காவலரான அன்ரே ஆண்டர்சன்மீது விமர்சனம் எழுந்துள்ளது.

இதுதொடர்பாக அவர் கூறுகையில், மன நலம் பாதிக்கப்பட்ட சிறுமி தங்களைத் தாக்கியதால் அவரை பத்திரமாக அழைத்துச்செல்ல பெப்பர் ஸ்பிரே பயன்படுத்தியதாகவும், கறுப்பின சிறுமி என்று பாகுபாட்டை நாங்கள் பார்க்கவில்லை, அந்தச் சிறுமியை வலுக்கட்டயாக தாக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

# இங்கிலாந்தில் கண்டறியப்பட்ட உருமாறிய கொரோனா 82 நாடுகளுக்கு பாதிப்பு பரவல்: உலக சுகாதார அமைப்பு

இங்கிலாந்து நாட்டில் கடந்த 2020 ஆம் ஆண்டு டிசெம்பரில் புதிய வகை உருமாறிய கொரோனா வைரஸானது கண்டறியப்பட்டது. இதனால், பல நாடுகள் அந்நாட்டுடனான தங்களது விமானப் போக்குவரத்து சேவைக்கு தற்காலிக தடை விதித்தன.

இந்த புதிய வகை உருமாறிய கொரோனாவானது எளிதில் பரவும் தன்மை கொண்டது என கண்டறியப்பட்டது. இதனால், இங்கிலாந்தில் சமூக இடைவெளி பின்பற்றுதல், முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட விதிமுறைகள் மீண்டும் கடுமையாக பின்பற்ற அறிவுறுத்தப்பட்டது.

இந்நிலையில், உலக சுகாதார அமைப்பின் சுகாதார அவசரநிலை திட்டத்திற்கான தொழில் நுட்ப தலைவர் மரியா வான் கெர்கோவ் ஆலோசனை கூட்டமொன்றில் கலந்து கொண்டார். அவர் பேசும்போது, இங்கிலாந்து நாட்டில் முதன்முறையாக அடையாளம் காணப்பட்ட உருமாறிய வகையைச் சேர்ந்த கொரோனாப் பாதிப்பு 82 நாடுகளில் இதுவரை கண்டறியப்பட்டுள்ளன.

தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்ட மற்றொரு வகை கொரோனா பாதிப்பு 39 நாடுகளில் கண்டறியப்பட்டு உள்ளன. இதேபோன்று பிரேசில் நாட்டில் இருந்து கண்டறியப்பட்ட கொரோனா பாதிப்பு 9 நாடுகளில் பரவியுள்ளன என கூறியுள்ளார்.

# நடுக்கடலில் உயிருக்குப் போராடிய சீன மாலுமி காப்பாற்றிய ஆர்ஜென்டினாக் கடற்படையினர்



அட்லாண்டிக் கடலில் கப்பலில் படுகாயம் அடைந்து உயிருக்குப் போராடிய சீன மாலுமியை ஆர்ஜென்டினா கடற்படையினர் பத்திரமாக காப்பாற்றி மருத்துவமனையில் சேர்த்தனர்.

அட்லாண்டிக் பெருங்கடலில் சீனக் கப்பல் ஒன்று சென்று கொண்டிருந்த நிலையில் அதன் மாலுமிக்கு எதிர்பாராத விதமாக அடி ஏற்பட்டு கால் துண்டானது. இது பற்றிய தகவல் அறிந்த ஆர்ஜென்டினா கடற்படையினர் விமானத்தில் பறந்து வந்து உயிரை துச்சமென மதித்து கயிறு மூலம் நடுக்கடலில் நின்ற அந்த சீனக் கப்பலில் இறங்கினர்.

பின்னர் அங்கு உயிருக்கு போராடி கொண்டிருந்த மாலுமியை பத்திரமாக காப்பாற்றி மருத்துவமனையில் சேர்த்தனர். இதுதொடர்பான வீடியோ தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

# மனிதர்களை விண்வெளிக்கு அனுப்புவதற்கு சுற்றுலா ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் திட்டம்!

விண்வெளி வீரர்கள் அல்லாத மனிதர்கள் பங்கேற்கும் விண்வெளி சுற்றுலாத் திட்டத்தை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

ஸ்பேஸ் எக்ஸ் – ன் டிராகன் குறுங்கலத்தில், அனுபவம் வாய்ந்த விமானி ஜாரெட் ஐசக்மேன் தலைமையில் 4 நபர்கள் விண்ணுக்கு அனுப்பப்பட்டு அவர்கள் பூமியை சுற்றி வருவார்கள். இன்ஸ்பிரேன் 4 என பெயரிடப்பட்டுள்ள இந்த திட்டத்தின் வாயிலாக கிடைக்கும் பணவசூல், குழந்தைகள் மருத்துவமனை ஒன்றுக்கு வழங்கப்படும் எனவும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

விண்வெளிக்குச் செல்லும் இந்த 4 பேருக்கும் பால்கன் ராக்கெட் மற்றும் டிராகன் குறுங்கலத்தில் தேவையான பயிற்சியும் அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதியில் இந்த விண்வெளிப் பயணத்தை மேற்கொள்ள ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.




# மியன்மாரில் இராணுவ ஆட்சி; கைதான தலைவர்கள் எங்கே?

மியன்மாரில் இராணுவப் புரட்சியை தொடர்ந்து கைது செய்யப்பட்ட ஆங் சான் சூகி உள்ளிட்ட தலைவர்கள் ரகசிய இடத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இராணுவம் ஆட்சியை கைப்பற்றி 24 மணி நேரம் கடந்த பின்னரும் கைது செய்யப்பட்ட இந்த தலைவர்கள் குறித்த எந்த விவரங்களையும் இராணுவம் வெளியிடவில்லை.

இதனிடையே தலைநகர் நேப்டாவ் உள்ளிட்ட நகரங்களை இராணுவம் தனது முழு கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளது. நகர வீதிகளில் இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டு, இராணுவ ஆயுத வண்டிகள் ரோந்து வந்த வண்ணம் உள்ளன.

முடக்கி வைக்கப்பட்டிருந்த இணையத்தள, தொலைபேசி சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டாலும், யங்கூன் சர்வதேச விமான நிலையம் தொடர்ந்தும் மூடியே இருக்கிறது.

பிரபல புத்த துறவி ஷ்வே நியா வார் சதாயத்வா - வையும் இராணுவம் கைது செய்துள்ளதால், பெரும்பான்மையாக உள்ள புத்த மக்கள் ஆத்திரமடைந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# மியன்மார் மீது மீண்டும் பொருளாதாரத் தடை விதிக்க நேரிடலாம்

## அமெரிக்கா எச்சரிக்கை

மியன்மாரில் இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது. நோபல் பரிசு பெற்ற அந்த நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி கைது செய்யப்பட்டார். மியன்மார் இராணுவத்தின் இந்த நடவடிக்கைக்கு உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் மியன்மாரில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது குறித்து அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கூறியதாவது:–

மியன்மாரில் இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றுவது ‘நாட்டின் ஜனநாயகத்தின் மீதான நேரடித் தாக்குதல். நாட்டின் ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி மீதான நேரடித் தாக்குதல் இது.’

மேலும் ஜனநாயக அரசாங்கத்திற்கு அமைதியான மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கையின் மத்தியில் பொருளாதார அபராதங்களை உயர்த்துவதற்கான 2016 ஆம் ஆண்டு முடிவை உடனடியாக மதிப்பாய்வு செய்யப்படும்.

இராணுவம் ஆட்சி தொடர்ந்தால் மியன்மாரில் மீண்டும் பொருளாதாரத் தடைகளை விதிக்க நேரிடலாம் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# வடமாகாண தொண்டர் ஆசிரியர்கள் தீர்வு கிடைக்கும் வரை போராட்டம்!





ஆளுநர் அலுவலகம் முன்பாக நடந்தது

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் தமக்கான நிரந்தர நியமனத்தை வழங்க வேண்டும் என வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் உள்ள மாகாண ஆளுநர் செயலகம் முன்பாகப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்த போராட்டத்தின் போது வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளரிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும்போராட்டக்காரர்கள்கையளித்துள்ளனர்.

இது தொடர்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்:-

யுத்த காலத்திலும் அதற்குப் பின்னரான தற்போதைய காலத்திலும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் எவ்வித கொடுப்பனவுகளும் இல்லாமல் நூற்றுக் கணக்கான ஆசிரியர்கள், சேவை அடிப் படையில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வருகின்றனர்.

எனவே, எமக்கான நிரந்தர நியமனத்தை வழங்க வலியுறுத்தி கடந்த பல வருடங்களாக நாம் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வந்திருந்தோம். ஆயினும், எங்களுடைய கோரிக்கைகளுக்கு உரிய தரப்பினர் செவிசாய்க்காத நிலையில் மீண்டும் நாம் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

எனவே, வடக்கில் நீண்ட காலமாகத் தொண்டர் ஆசிரியர்களாக இருக்கின்ற எங்களுக்கான நிரந்தர நியமனத்தை உடனடியாக சம்பந்தப்பட்ட தரப்பினர் வழங்க வேண்டும் எனக் கோரி மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக நேற்று (திங்கட்கிழமை) மீண்டும் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளோம்.

ஆகவே, எமது கோரிக்கைகளுக்கமைய நிரந்தர நியமனம் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்யும் வகையில் உரிய பதில் கிடைக்க வேண்டும். அதேநேரத்தில், எமக்கான நியமனம் கிடைக்க வேண்டும். அவ்வாறு கிடைக்காத இடத்தில் நாம் தொடர்ச்சியான போராட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுக்கத் தீர்மானித்திருக்கிறோம்.

எமக்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால் நாம் இதே இடத்திலே தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்திருக்கிறோம். எனவே, நீண்ட காலமாகப் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் போராடி வருகின்ற எமக்கான தீர்வைப் பெற்றுத்தர சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறோம். - என்று குறிப்பிட்டுள்ளனர்.

## வடக்கில் கொரோனா தொற்றாளர் 555பேர்

வடக்கு மாகாணத்தில் கடந்த ஜனவரி முதல் இதுவரையான காலப்பகுதியில் 557 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இவர்களில், 330 பேர் வவுனியா மாவட்டத்திலிருந்தும், 159 பேர் மன்னார் மாவட்டத்திலிருந்தும், 46 பேர் யாழ். மாவட்டத்திலிருந்தும், 14 பேர் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்தும், மற்றும் எட்டுப் பேர் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்தும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொரோனாத் தொற்று ஏற்பட்ட ஆரம்ப காலத்திலிருந்து வடக்கு மாகாணத்தில் இதுவரை 805 பேர் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதில், வவுனியா மாவட்டத்தில் 362 பேரும், யாழ். மாவட்டத்தில் 221 பேரும், மன்னார் மாவட்டத்தில் 176 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 34 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 12 பேரும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், கொரோனாத் தொற்று ஆரம்பமான காலம் முதல் இதுவரை வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றால் மூன்று இறப்புகள் பதிவாகியுள்ளன. மன்னார் மாவட்டத்தில் இரு இறப்புக்களும் வவுனியா மாவட்டத்தில் ஓர் இறப்பும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, 2021 ஜனவரி யாழ். போதனா வைத்தியசாலையில் 11 ஆயிரத்து 329 பி.சி.ஆர். பரிசோதனைகளும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் 4 ஆயிரத்து 626 பி.சி.ஆர். பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## முறைகேடான அதிபரை மாற்றுமாறு கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்!

வவுனியா - செட்டிகுளம் கோட்டத்திற்குட்பட்ட சின்ன சிப்பிகுளம் தாருல் உலூம் முஸ்லிம் மகாவித்தியாலய மாணவர்களும் பெற்றோர்களும் நேற்று (திங்கட்கிழமை) காலை பாடசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

அந்தப் பாடசாலையில் கடமையில் இருந்த அதிபர், யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளதுடன் அவருக்குப் பதிலாக மாகாண கல்வித்திணைக்களத்தால் புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டு, நேற்று அவர் கடமைகளை பொறுப்பேற்கவிருந்த நிலையில் இந்த ஆர்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவித்துள்ளவை வருமாறு:-

தற்போது நியமிக்கப்பட்டுள்ள அதிபர், எமது பாடசாலையில் ஏற்கனவே அதிபராக பணியாற்றியிருந்தார்.

இந்நிலையில் அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உள்ளமையுடன் பாடசாலையில் பல்வேறு முறைகேடான சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன. எனவே குறித்த அதிபரை மீண்டும் எமது பாடசாலைக்கு நியமித்து பாடசாலையின் அபிவிருத்தியில் வீழ்ச்சியை ஏற்படுத்த வேண்டாம்.

எனவே இவருக்கு பதிலாக வேறு ஓர் அதிபரை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளுங்கள். - என வலியுறுத்தியுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பாடசாலையின் பிரதான வாயிலை மூடி, எவரையும் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. சம்பவ இடத்துக்கு சென்ற செட்டிகுளம்



கோட்டக்கல்வி அதிகாரி மற்றும் பொலிஸார் ஆகியோர் பேச்சு நடத்திய நிலையிலும் அவர்கள் தமது கோரிக்கையில் உறுதியாக நின்றனர்.

அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா தெற்கு வலயக்கல்விபணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன், இது தொடர்பாக கலந்துரையாடி ஒரு தீர்வுக்கு வரலாம் எனத் தெரிவித்தமையுடன், பாடசாலை வாயிலை திறக்குமாறு கோரியிருந்தார். பின்னர் பாடசாலை வாயில் திறக்கப்பட்டு, ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச்சு முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பேச்சின் பிரகாரம் அவர்களது கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டநிலையில், போராட்டம் கைவிடப்பட்டது. பின்னர் கல்விசெயற்பாடுகள் வழமைக்குத் திரும்பின. அதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த வலயக் கல்வி பணிப்பாளர், கிராமமக்கள் மற்றும் பெற்றோர்களது கோரிக்கைக்கமைய மேற்படி அதிபருக்கு பதிலாக வேறு ஓர் அதிபரை இந்தப் பாடசாலைக்கு நியமிப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பதாக அவர்களுக்கு உறுதியளித்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

## ‘அமைதித் தூபி’ என்பதற்கு இடமேயில்லை: முள்ளிவாய்க்கால் தூபியாகவே அமையும்!

### மாணவர் ஒன்றியம் தெளிவான நிலைப்பாடு



யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைக்கப் பட்டு வரும் நினைவுத்தூபி முள்ளிவாய்க்கால் நினைவு தூபியாகவே அமைக்கப்படும் என யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் உறுதிபடக் கூறியுள்ளது.

அந்த வகையில், முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி எனும் பெயரில் முன்னர் இருந்த அமைப்பிலேயே தூபி மீளக் கட்டப்படும் என மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இதனைவிடுத்து, ‘அமைதித் தூபி’ எனும் பெயரிலோ அல்லது வேறு வடிவங்களிலோ தூபியை அமைக்க அனுமதிக்க மாட்டோம் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் இருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி சட்ட விரோதமானது எனக் கூறி பல்கலைக்கழக துணைவேந்தரின் உத்தரவில் கடந்த மாதம் எட்டாம் திகதி இடித்தழிக்கப்பட்டது.

இதனையடுத்து, மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டமையுடன், அரசியல் பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் பல்கலைக்கழக பழைய மாணவர்கள் என அனைத்து தரப்பினரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த, எதிர்ப்பலையைத் தொடர்ந்து ஜனவரி 11ஆம் திகதி காலை தூபியை மீள அமைப்பதற்கு என துணைவேந்தர் தலைமையில் மாணவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டதுடன் பின்னர், தூபி கட்டுவதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில், கடந்த சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில், தூபி விவகாரத்தில் நடைபெற்ற விடயங்களை விலாவரியாகக் குறிப்பிட்டு துணைவேந்தர் சிறிசற்குணராஜா அறிக்கை சமர்ப்பித்தார். அதனைத் தொடர்ந்து தற்போது அமைக்கப்படவுள்ள தூபியை ‘அமைதித் தூபி’ எனும் பெயரில் அமைக்க பேரவை அனுமதி அளித்துள்ள நிலையில், மாணவர் ஒன்றியம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1986.05.14 | பிறந்த திகதி - 1984.10.25 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - புனர்பூசம் 2 | நட்சத்திரம் - விசாகம் 1 |
| செவ் - --- | சூ/செவ் - 8 இல் |
| பாவம் - 28 3/4 | பாவம் - 94 1/4 |
| கல்வி - BSc பட்டதாரி | கல்வி - A/L |
| தொழில் - ஆசிரியர் | தொழில் - ஆயுள்வேத தாதிய உத்தியோகத்தர் |
| எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம் | எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம் |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.02.2021இல் வெளியிடப்பெற்றது.